THE HINDU - ENGLISH
Dated: 16. 11. 2024

# More women voted in first phase of polls in Jharkhand

**The Hindu Bureau**
PATNA

Women voters outnumbered men by 4.8% in the first phase of Jharkhand Assembly election.

As many as 37 of the 43 constituencies that went to the polls on Wednesday saw more women casting their votes than men, according to data released by the State Election Commission on Friday.

A voter turnout of 66.65% was recorded in this phase, a 2.75% increase from 2019, said K. Ravi Kumar, Jharkhand Chief Electoral Office, in Ranchi. The turnout among men was 64.27% and 69.04% among women.

Baharagora recorded the highest overall turnout of 79.28%. With 81.59%, it also recorded the highest turnout among women

Ranchi recorded the lowest turnout of 52.46%.

TIMES OF INDIA

Dated: 16.11.2024

# Spl camps to update voter list

TIMES NEWS NETWORK

**Chennai:** The elections department will hold special camps on Nov 16, 17, 23, and 24 for inclusion, deletion, and correction in the electoral roll, said an official release.



The special camps will be held at designated locations, and forms will be made available for inclusion, deletion, linking of Aadhar with electors' photo identity card, modification, and transposition of entries in the electoral rolls.

Filled-in forms can be submitted at the locations themselves.

The election commission is conducting a summary revision of the electoral roll from October 29.

D.T. NEXT
Dated: 16.11.2024

# Voting in J'khand poll records 66%, Women outnumber men voters



**Women stand in a queue to cast their votes at a polling booth**

**NEW DELHI: Women voters outnumbered men in phase 1 of the Jharkhand assembly elections with 37 of 43 seats recording a higher women turnout, Election Commission said on Friday.**

The phase 1 of polls held on November 13 also saw a voter turnout of 66.65 per cent, which was 2.75 per cent higher than the turnout recorded in the 2019 assembly polls in these 43 seats.

"Women voters participated enthusiastically, surpassing the overall male turnout by 4.8 per cent, underscoring their increasing involvement in shaping the democratic process," EC said.

Jharkhand chief electoral officer has confirmed that all polling parties have returned safely and scrutiny has been completed in the presence of the candidates or their authorised agents.

Final votes polled will be available post-counting with the counting of postal ballots. Postal ballots include those given to service voters, absentee voters – those above 85 years of age, persons with disability, those deployed in essential services and voters on election duty. Daily account of such postal ballots received, according to the established guidelines, are given to all candidates, the poll authority noted.

THE HINDU - TAMIL
Dated: 16. 11. 2024

வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்ய

# இன்றும், நாளையும் சிறப்பு முகாம்

● சென்னை

தமிழகத்தில் உள்ள 69 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் இன்றும், நாளையும் வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம்கள் நடைபெறுகின்றன.

இதுகுறித்து தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, அடுத்தாண்டு ஜனவரி 1-ம் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப்பணிகள் கடந்த அக்.29-ம் தேதி தொடங்கி மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. இதன் ஒருபகுதியாக வாக்காளர்கள் தங்கள் பெயரைச் சேர்ப்பதற்கும், வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கும் வசதியாக இந்தியத் தேர்தல் ஆணையத்தால், நவ.16, 17 மற்றும் 23, 24 ஆகிய சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில், வாக்குச்சாவடி அமைவிடங்களில் சிறப்பு முகாம்கள் அறிவிக்கப்பட்டன.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்தல், இடமாற்றம், ஆதார் எண்ணை இணைத்தல் ஆகியவற்றுக்கான படிவங்கள் அந்தந்த வாக்குச்சாவடி அமைவிடங்களில் கிடைக்கும். பூர்த்தி செய்த படிவங்களை அங்கேயே சமர்ப்பிக்கலாம். குறிப்பாக புதிய வாக்காளர் சேர்க்க படிவம் 6, வெளிநாட்டு வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 6ஏ, வாக்காளர் பட்டியல் அங்கீகாரத்துக்காக ஆதார் எண் உண்மை என சான்றுரைக்க 6 பி, வாக்காளர் பட்டியில் பெயர் சேர்ப்பதை ஆட்சேபிக்கவும், ஏற்கெனவே உள்ள பெயரை நீக்குவதற்கும் படிவம் 7-ஐ சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

DINA MALAR

Dated: 16.11.2024

# தேர்தல் பணிக்கு மதிப்பூதியம் ரூ.171.89 கோடி அரசு விடுவிப்பு

**கோவை, நவ. 16–**

தமிழகத்தில் லோக்சபா தேர்தல் பணியில் ஈடுபட்ட அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு மதிப்பூதியம் வழங்க, 171 கோடியே, 89 லட்சத்து, 11,407 ரூபாயை, தமிழக அரசு விடுவித்துள்ளது.

லோக்சபா தேர்தல் தமிழகத்தில் ஏப்., 19ல் நடந்து, ஜூன் 4ல் ஓட்டுகள் எண்ணப்பட்டன. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளில் இருந்து, ஓட்டுகள் எண்ணப்பட்ட நாள் வரை தேர்தல் பணியில் ஈடுபட்ட அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு வழக்கமாக மதிப்பூதியம் வழங்கப்படும்.

ஐந்து மாதங்களாகியும் இத்தொகை வழங்கப்படவில்லை. இதேபோல், தேர்தல் பணிக்கான செலவின தொகையும் விடுவிக்கப்படாமல் இருந்தது.

இதுதொடர்பாக, அக்., 19ல் நம் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. உடனே, தேர்தல் செலவினத்துக்கான தொகை மட்டும் வழங்கப்பட்டது.

மதிப்பூதியம் வழங்க இரு மாதங்களாகும் என, தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர். தீபாவளி பண்டிகை செலவுக்கு பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருந்த தேர்தல் பிரிவு அலுவலர்கள் சோகமாகினர்.

தமிழக தலைமை தேர்தல் அலுவலராக அர்ச்சனா பட்நாயக் நியமிக்கப்பட்டதும், தேர்தல் தொடர்பான பணிகள் வேகப்படுத்தப்பட்டுள்ளன. மதிப்பூதியம் வழங்காமல் இருப்பது அவரது கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அத்தொகை உடனடியாக விடுவிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பணியாற்றிய அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் எண்ணிக்கைக்கேற்ப சமர்ப்பிக்கப்பட்ட கேட்பு பட்டியல் சரிபார்க்கப்பட்டு, நிதி வழங்கப்பட்டுள்ளது.

மொத்தம், 171 கோடியே, 89 லட்சத்து, 11,407 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில், சென்னைக்கு, 10.12 கோடி, மதுரைக்கு 8.06 கோடி, கோவைக்கு, 7.84 கோடி, திருப்பூருக்கு, 5.61 கோடி, நீலகிரிக்கு 1.98 கோடி ரூபாய் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள் மற்றும் அலுவலர்களின் பதவி மற்றும் பணியிடத்துக்கு ஏற்ப, 5,000 ரூபாய் முதல் 33,000 ரூபாய் வரை மதிப்பூதியம் கிடைக்கும். நிதி ஒதுக்கி, அரசாணை வெளியாகி விட்டதால், தேர்தல் பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.